அவர்களுக்கும், அதேபோல், கீழ்பவானி வாய்க்கால் புனரமைப்புத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மக்கள் நலத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி, மக்கள் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றுக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், அவருக்கு உற்ற துணையாக இருந்து மக்களுக்கான வளர்ச்சிப் பணிகளைச் சிறந்த முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எனக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்குவதோடு, எனக்கு அறிவுரைகளையும் வழங்கி நல்வழிப்படுத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி.கே. அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பதினைந்தாவது தமிழக சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தின் இறுதி நாளில் எனக்குப் பேச வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பவானிசாகர் தொகுதியில் கீழ்பவானி அணை கட்டும்போது, பவானிசாகரில் அரசு திட்டம் துவக்கப்பட்டு, இன்றுவரை நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இப்பகுதியைச் சுற்றியுள்ள, 50-க்கும் மேற்பட்ட குக்கிராமங்களில் உள்ள ஏழையெளிய மக்களின் நலன் கருதி, அவர்கள் அதிக அளவில் பயன்பெறும் வகையில் பவானிசாகர் அரசு மருந்தகத்தை அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தாளவாடி தனி வட்டமாக அறிவிக்கப்பட்டு, 5 ஆண்டுகளுக்கும் மேலாக சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில், தாளவாடியில் உள்ள மலைப் பகுதி மக்கள், பிரேதப் பரிசோதனை செய்ய வேண்டுமானால் 60 கிலோ மீட்டர் தூரமுள்ள சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, தாளவாடி மலைப் பகுதி மக்களின் நலன் கருதி, தாளவாடி அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனைக் கூடம் ஒன்றை அமைத்துத் தருமாறு

2021 பிப்ரவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்புடன் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மிகவும் சுறுசுறுப்பானவர். ஏற்கெனவே மக்கள் நல்வாழ்வுத் துறையின்மூலம் பல பணிகளை அவருடைய சட்டமன்றத் தொகுதிக்குச் செய்திருக்கிறோம். தற்போது அவர் கேட்ட கோரிக்கை துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

48—

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***63217—திரு. அ. பிரபு:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், இராயப்பனூர் ஊராட்சியில் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகள் தமிழகத்தை ஆண்ட முத்தான முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகின்றேன். பொற்கால தமிழகத்தை உருவாக்கி, உழைக்கின்ற*

மக்களின் உரிமைக் குரலாக ஆட்சி நடத்தி, இன்றைக்கு தெய்வமாக இருக்கின்ற எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சி நடக்குமா, ஜெயிக்குமா, ஜொலிக்குமா, வெற்றி பெறுமா, நீடிக்குமா, நிலைக்குமா, நிலைத்து, நீடித்து நிற்குமா என்று வேடிக்கையாகப் பேசிய ஈனர்களின் மத்தியில், அம்மா அவர்களின் ஆட்சியை, மாற்றாரும் மதிக்கின்ற வகையில் சிறப்பாக நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகின்றேன். அதேபோன்று, பொறுப்போடும், பொறுமையோடும், மிடுக்கோடும் அம்மா அவர்களின் ஆட்சிக்குத் துணையாக இருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர், கழக ஒருங்கிணைப்பாளர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகின்றேன். இம்மாமன்றத்தை கண்ணியம் குறையாமல் நடத்தி, சரித்திரத்தில் இடம்பெற்ற சபையின் நாயகர், அண்ணன் மாண்புமிகு சபாநாயகர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்களின் கேள்விக்குப் பதிலளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள இராயப்பனூர் ஊராட்சியில் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

திரு. அ. பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நான் கேட்கும்போதெல்லாம் கேள்வி கேட்பதற்கு வாய்ப்பை வழங்கி, இந்த அவையிலே பலமுறை எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். தமிழகத்திலே சிறப்பான ஆட்சி நடத்தி வரும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தற்போது நடக்க இருக்கின்ற 2021 ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலிலே வெற்றி பெற்று மீண்டும் தமிழகத்திற்கு முதலமைச்சராக வர வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி